# கிருபையின் பிரயாணம் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: நீங்கள் இதுவரைக்கும் எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, "என்னால முடியாது! என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது?

**டாக்டர் வேயின் பார்பர்:** ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, "தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்."

தேவன் என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக

இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

**அறிவிப்பாளர்:** இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

**பார்பர்:** அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

**அறிவிப்பாளர்:** ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்காக விசேஷித்த நிகழ்ச்சியை வைத்திருக்கிறோம். எனது விருந்தினர் Dr. வேயின் பார்பர். தங்கள் வாழ்நாளில் கிறிஸ்தவ ஜீவியத்தை வாழ்வது எப்படி என்று பல பிரசங்கங்களை கேட்டிற்கும் கிறிஸ்தவர்களுக்கு உதவகூடியவர்களில் இவர் மிக சிறந்த நபர். நாம் பலமுறை தீவிரமாக முயற்சித்திருக்கிறோம், உங்களால முயன்ற அளவு முயற்சித்தும் படு கேவலமான முறையில் தோற்றுபோகிறீர்கள் நீங்க ஏதோவொரு காரியத்தை இழந்துவிடுகிறீர்கள். ஏதோவொரு தவறு இருக்கிறது உங்களுக்கு எதுவுமே சரியாக வருவதில்லை. இன்றைக்கு அவர் உங்களை ஊக்குவித்திடுவார். இன்றைக்கு நமது தலைப்பு சிறப்பாக இருக்கிறது. வசனங்களை எடுத்துசொல்லும்விதமாக உதாரணங்களை வைத்திருக்கிறார். இவர் வேத வசனத்தில் சிறந்து விளங்குகிறார். இன்றைக்கு நமது தலைப்பு இதுதான், நீங்கள் இயேசுவுடன் இணைந்து இருப்பதை கற்பனை செய்திடுங்கள். இதுவரைக்கும் அப்படி பார்த்திருக்கிறீர்களா நீங்க உங்க வீட்டில், வாழ்க்கையில், தொழிலில், இயேசுவுடன் சிறந்த நேரத்தை செலவிட்டிருக்கிரீர்களா? அப்போது என்ன நடக்கும்? சரி, அதை பற்றிதான் இன்றைக்கு நாம் பேசிட இருக்கிறோம். மேலும், வேயின், நாம் பார்க்க விரும்புகிற காரியத்திற்கு நம்மை நடத்தி செல்லும் விதமாக சம்பவத்தை நீங்கள் சொல்ல இருக்கிறீர்கள். அது மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருக்க

போகிறது என்று தெரியும். எனக்கு இதுக்கு மேல பொறுமை இல்லை. நீங்க என்ன சொல்ல ஆவலாக இருக்கீங்களோ அந்த விஷயங்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

**பார்பர்:** ஆமா, ஜான், எனக்கு வெளியில போறது ரொம்ப பிடிக்கும். வேட்டையாடுவது பிடிக்கும், மீன்பிடிப்பது, போல வெளியில போய் சுத்திறது ரொம்ப பிடிக்கும். ஸ்கையிங் கூட ரொம்ப பிடிக்கும், ஆனா இப்பெல்லாம் அதிலிருந்து ரொம்ப தள்ளி வந்துட்டேன். ஆனா நா மிசிசிபிக்கு ஒரு கூட்டத்திற்காக போயிருந்தேன். என்னுடைய நண்பருக்கு பல ஏற்க்கர் நிலம் இருந்தது. அதனால, அந்த பகுதியில் வேட்டையாட முடியும், ஓ, அருமையானது. வேட்டையாடிடலாம், வேடையாடறது எல்லாம் நமக்குதான். அதாவது, நாமதா ஜெயிப்போம். அவருக்கு இருந்த அந்த ஏரில நிறைய மீன்களும் இருக்கும். உண்மையாவே, அது நல்ல சிறப்பான இடம், அவர் என்னை அங்க வந்து அவரோட சபையில கூட்டம் நடத்தும்படி கூப்பிட்டிருந்தார். அதுக்காக அங்க போயிருந்தேன், ஆனா இதுல பிரச்சனை என்னன்னா, நா பிப்ரவரி மாதம் போயிருந்தேன்.

அங்க, மான்கள் வரும் நாட்கள் முடிஞ்சிருச்சு. ஏரியும் உறைந்து இருந்தது. அப்ப நா கேட்டேன், “ஜார்ஜ், நாம என்ன செய்ய போகிறோம்? அதற்கு அவர், நீர்நாய் அணைகளை உடைக்கப்போகிறோம் என்றார்.” எதற்காக என்று

யோசித்துகொண்டிருந்தேன்? அதற்கு அவர், “நாம, சில மரங்களை விற்கும்படியாக இருக்கிறோம், அது சுமார் 2, 000 ஏக்கருக்கு இருக்கிறது, அதனூடாக ஒரு ஓடை போய்கொண்டு இருக்கிறது.” அதை நதிஎண்ட்ரே சொல்லலாம், ஆனா ஓடைகளை போல இருக்கிறது. இதுல விஷயம் என்னன்னா, “இந்த நீர்நாய்கள் அங்க வரும்போது, அவை அந்த ஓடைகளை அடைத்துவிடுகிறது அதினால் தண்ணீர் மரங்களுக்கு மேல் எழும்பிவிடுகிறது, அதனால அதை விற்க முடியவதில்லை. அதனால ஒவ்வொரு வாரமும் அந்த நீர்ணைகளை பிடித்து அதினால் உண்டான நீர்நாய் அணைகளை உடைத்தெறிய வேண்டியிருக்கிறது என்றார்.” அவர் சொன்னார், “நீங்களும் என்னோட வரணும்,” நான் யோசித்தேன், அறிமையாயிருக்குமே. மேலும் அவர், “நம்மகிட்ட 13 டைனமைட் குச்சிகள் இருக்கிறது.” பரலோகத்தில் கூச்சல் சத்தம் போல ஒன்றை கேட்டேன். ஒருவேளை மிகாவேலும் காபிரியேலும் சத்தமா சொல்லியிருப்பாங்களோ, “கிளம்புங்க, சீக்கிரம், சீக்கிரம், நமக்கு இன்னும் 10 தூதர்கள் அதிகமா தேவைபடுகிறார்கள்! அதற்கு மத்தவங்க கேட்டிருப்பாங்க எதற்காக? “பார்பரும் ஹெச்டரும் நான்கு சக்கர வாகனங்களில் 13 டைனமைட் குச்சிகளுடன் போயிட்டு இருக்காங்க.

நாங்க அந்த தண்ணீருக்குள் இறங்கினோம். நீச்சல் உடையை போட்டுகொண்டார், இப்ப அவ ர்தன்நீருக்குள் நீந்தினார், அவர் ஒரு டைனமைட் குச்சியை எடுத்து தண்ணீருக்குள் சென்று நீர்நாய்

அணைகளுக்கு கீழ் வைத்தார். நான் சொன்னேன், “டைனமைட்ட தண்ணீருக்கு கீழ் வைக்க முடியாது.” இதுவரைக்கும் டைனமைட்டுக்கு அருகில் நான் இருந்தது கிடையாது. அதற்கு அவர் இதை பாருங்கள் என்றார். அவர் இன்னொரு குச்சியை எடுத்தார், அதற்கு ஒரு மேல் உரையை போட்டார், அதில் எல்லா வயர்களும் இணைக்கப்பட்டிருந்தது. அவர் என்னிடம், அந்த வயர்களின் நுனியை எடுத்து நிலத்தில் ஊன்றுங்கள் என்றார். நான் கேட்டேன், எதற்காக?” அவர் சொன்னார், “ நிலையான மின்காந்தம் இந்த டைனமைட்டை வெடிக்க வைக்கும் பற்றிசியா, என்னுடைய மனைவி, என்னுடைய சரீரம் ஐநூறு துண்டுகளாக இருப்பதை பார்க்கும்படி நான் விரும்பவில்லை என்றார். சரி, ஓகே, அதை நான் நிலத்தில் ஊன்றினேன்.

அவர் அந்த மேலுறையை போட்டு  அதை அவர் கீழே தண்ணீருக்குள் வைத்துவிட்டார், அவர் வெளியில் வந்து என்னிடம் சொன்னார், “சரி, வேயின், இப்ப எங்கையாவது மறைந்துக்கொள்ளுங்கள். அதற்கு நான், இல்லை. நா வேடிக்கை பார்க்கணும் என்றேன்.” அதற்கு அவர், வேயின், எதையாவது நாம மேல தூக்கி வீசினால் அது கீழதா வந்துவிழும் என்றார்.” நா அவர் சொன்னதை கேட்டிருக்கவேண்டும். ஆனா அவர் அங்க ஒரு பேட்டரி வைத்திருந்தார் இந்த இரண்டு முனைகளையும் வழக்கம் போல எதிர்முனையில் வைத்தார், பாசிடிவ் அப்பறம் நெகடிவ்  போல்ஸ், அவர் சொன்னார், “நெருப்பு வையுங்கள்!”

இந்த டைனமைட் ரொம்ப சுவாரஸ்யமானது ஏன்னா உங்களால முதலில் அதை பார்க்க முடியாது, ஆனா உங்களால உணர முடியும். அது பெரிய சத்தம் பூம்னு வெடிச்சுது.

அவர் சொன்னது சரியா இருந்தது. எல்லாம் தெறித்து எழ ஆரம்பித்தது நாங்க இங்கும் அங்கும் ஓட ஆரம்பித்தோம் ஏன்னா  எல்லாம் தெறிச்சு கீழ விழ துவங்கியது. அந்த நேரத்துல, எனக்கு ஒன்னு தோன்றியது, அதாவது தண்ணீர் பேசுவதுபோலிருந்தது, "புரண்டு ஓடிடலாம், புரண்டு ஓடிடலாம், புரண்டு ஓடுவோம்." அது, மட்டுமல்ல, ஒரு அணையை நாம உடைத்தால் அது எப்படி இருக்கும், "ஊ, ரொம்ப நன்றி, ஓடு, நதியே ஓடிடு."

ஒரு வருடம் முடிந்தது. மறுபடியும் போனேன். நான் கேட்டேன், ஜார்ஜ், இந்த முறை நாம என்ன செய்யபோகிறோம்? ஏன்னா அதுவும் பிப்ரவரி மாதமாக இருந்தது. அவர் சொன்னார், "நாம நியூக்கிளியர் வெடி ஒன்றை தயாரிக்க போகிறோம். " நான் கேட்டேன் - அதற்கு முன்பாக, அவர் ஆலோசனை கேட்டுகொண்டிருந்தார்; அவர் நல்லா இருக்காருன்னு நினைத்தேன் - அவரிடம் நாம என்ன செய்ய போகிறோம் என்றேன். அதற்கு அவர், "இந்த நீர்நாய் அணைகளை உடைத்து உடைத்து நான் சோர்ந்துபோயிட்டேன். இப்ப நீர்நாயின் குகைக்கு போறோம் என்றார்." அதற்கு நான், ஆல்ரைட்! இப்ப அதனுடைய வீட்டிற்கே போகபோகிறோம் என்றேன்." அதற்கு அவர், ஒவ்வொரு வாரமும் இதையே செய்து அலுத்துவிட்டது என்றார்."

அது இருக்கிற இடத்திற்கு போக படகுலத்தான் போகணும். அதனால அப்படி போனோம். அவர் சொன்னார், அவர்கிட்ட ஐந்து காலூன் கேன்ல ஐந்து டைனமைட் குச்சிகள் இருந்தது, அதோட இன்னொரு ரசாயனம் டீசல்ல 72 மணிநேரம் ஊற வைச்சது இருக்குதுன்னு சொன்னார். "அது மட்டுமில், "நாம ஒரு வெடிகுண்டை தயாரிக்க போகிறோம் என்றார். நிஜமாக தான், ஓ மை, என்னவொரு வெடிகுண்டு. அதாவது, அந்த மாதிரி எதுவும் நான் கேட்டது கிடையாது. நாங்க நீர்நாய்கள் நிமித்தம் கவலை படுவதாக ஜனங்கள் சொல்வாங்க. நா சொன்னேன், "என்னுடைய விரல் நுனியை விட முடிவு ரொம்ப பெரிதாக முடிவு எதுவுமில்லை என்றேன்."

சரி, இந்த கதையை எதற்காக சொல்கிறேன் என்று அநேகர் யோசிக்கலாம். இந்த கதையை நான் சொல்வதற்கு காரணமிருக்கு இயேசு யோவான் ஏழு முப்பத்தி ஏட்டில் தெளிவாக சொல்லியிருக்கிறார், அவர் சொல்கிறார், "உங்களுக்குள் இருந்து ஜீவா தண்ணீருள்ள நதிகள் புரண்டு ஓடும். யோவான் 14:15-16, அவர் சொல்கிறார், "நான் என் பிதாவினிடத்திற்கு திரும்பி போக வேண்டும்," பேதுரு, உண்மையில் அவரோடு விவாதம் செய்கிறான். அதற்கு அவர், "இல்ல, நான் தொரும்பி போகாவிட்டால், ஆவியானவர் இங்கு வரமுடியாது, அவரால் உங்களோடு தங்கியிருக்கவும் முடியாது - அது பழைய உடன்படிக்கை - அவர் உங்களோடு கூட இருந்து உங்களுக்குள்

இருந்து ஜீவா தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும்படியாக செய்திடுவார் என்றார்.”

நாம என்ன செய்றோம் என்றால், ஜான், நம்முடைய சுய பெலத்தோடு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும் என்று நினைத்தால், அந்த அணையில் நாம் முழுகிவிடுவோம். ஜனங்கள் தான் கள் இருக்கும் அறை எதுவென்று தெரியாமல் அதில் தான் இருக்கவேண்டும் என்று முயலுகிறார்கள். இந்த ஆசீர்வாதம் வேண்டும் என்கிறார்கள், அந்த ஆசீர்வாதம், இந்த அனுபவம் வேண்டும், அந்த அனுபவம் வேண்டும் என்கின்றனர். அவர்களிடம் கிறிஸ்துவுக்குள் இருக்கிற சகல காரியங்களும் இருக்கிறது. அதை விசுவாசத்தில் கட்டவிழ்க்க வேண்டியதுதான் திறவுகோல். விசுவாசத்தினாலே பெற்றுகொண்டோம், விசுவாசத்தினாலே நாம் அஹ்டை கட்டவிழ்க்க வேண்டும். விசுவாசம் எனபது எல்லாவற்றியும் கிறிஸ்துவிடம் அர்ப்பணித்து அவருக்கு சரி என்று சொல்வதுதான்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், பல கிறிஸ்தவர்களுக்கு, இது ஒரு புதிய காரியமாக இருக்கும், அதனால் வசனத்தின் நங்கூரத்தை அவர்களுக்கு அளித்திட விரும்புகிறேன், சரியா. தேவனுடைய வார்த்தையை போதிப்பதில் நீங்க சிறந்த நபர்ன்னு தெரியும். நாம பார்த்துகொண்டிருக்கிற காரியத்தை புரிந்துகொள்ள எபேசியர் புஸ்தகத்திற்கு திருப்பிகொள்வோம். அதிலிருந்து துவங்கிடலாம். அதில்

ஒரு ஜெபம் இருக்கிறது, 3ம் அதிகாரம்,, வசனம் பதினாலில் இருந்து இருபத்தி ஒன்றுவரை, எனக்கு தெரியும், இந்த எபேசியர் புத்தகம் முழுவதும் ஜெபத்தினால் நிரம்பியிருக்கிறது. அது முதல் மூன்று அதிகாரத்தில் நிறைவடைந்து பிறகு நான்கு ஐந்து ஆறு அதிகாரங்களை நிலைபடுத்துகிறது. நா உங்களிடம் கேட்க்கிறேன், இந்த ஜெபத்தின் நிலையில் எங்களை நடத்தி செல்லுங்கள். பவுல் இந்த இடத்தில் என்ன சொல்ல முயற்சிக்கிறார்?

**பார்பர்:** ஓ, அருமையானது, ஏன்னென்றால் இது ஒரு அருமையான ஜெபம். வசனம் பதினான்கில் கூறுகிறார், "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு." மேலும் வசனம் பத்தொன்பது, "அவர் உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும், இந்த வார்த்தை அநுக்கிரகம் எனபது உங்களுக்கு ஒன்றை கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. தேவனிடத்தில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் ஒரு ஈவு. நாம் எதற்கும் பாத்திரவான்கள் அல்ல. ஆனா அவர் சொல்கிறார், "அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும்." இங்கு படியே என்ற வார்த்தையானது, நிறைவில் இருந்து என்று சொல்லவில்லை. சில மொழிபெயர்ப்புகள் நிறைவில் இருந்து என்கிறது. இல்ல, இல்ல, இல்ல, இந்த கிரேக்க வார்த்தை

வித்தியாசமானது; ஏக் நிறைவில் இருந்து. ஆனால் இங்கு அவர் பயன்படுத்துகிற வார்த்தை என்னவென்றால் காடா, அதற்கு இதன்படியே என்று அர்த்தம். அது ஒரு விஷயத்தின் அளவினை குறிக்கிறது. சரி, ஜான், எங்கிட்ட மில்லியன் டாலர்கள் இருந்தால் - அது எவ்வளவு நல்லா இருக்கும் - உங்களுக்கு நான் கொஞ்சம் பணம் கொடுக்க விரும்பினால், என்னுடைய சம்பத்திளிருந்து கொடுக்கும்படி விரும்புவீர்களா அல்லது சம்பத்தின்படியே கொடுக்கவேண்டும் என்று விரும்புவீர்களா?

**ஆன்கர்பெர்க்:** அதன் அடிப்படையில்

**பார்பர்:** ஏன்னென்றால் இன்றைக்கு நாம் பார்க்கிற அனைத்து காரியங்களும் கிறிஸ்து நமக்கு கொடுத்திருப்பவைகளின் பிரதிபலிப்பாக இருக்கிறது. மேலும் அவர் இங்கு சொல்லியிருக்கிறார், அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின்படியே அவர் நமக்கு தருகிறார்." சரி, இந்த ஐசுவரியம் என்னது? அவை எதற்காக இருக்கிறது? "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலபடுவதர்காக." இப்ப மறுபடியும் இந்த வார்த்தையை கவனிக்கலாமா, "ஐசுவரியம்". நமக்கு இருக்கும் இந்த ஐசுவரியம் எப்படிபட்டது? மூன்றாம் அதிகாரத்தில் எட்டாம் வசனத்தில் அதை சொல்லுகிறார், அதாவது, "பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப்

புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” இவை ஆராய்ந்து முடியாதவைகள். மேலும் அவர் சொல்லும்போது சொல்கிறார் ஒன்றாம் அதிகாரம், வசனம் பதினெட்டு, “உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்கள் உண்டாயிருக்கும்படி வேண்டிகொள்ளுகிறேன்.” இது ஒரு வகுப்பறையில் கற்றுகொல்ல்வேண்டிய காரியமல்ல. இது தேவனே உங்கள் இருதயங்களில் வெளிப்படுத்துகிற காரியமாக இருக்கிறது. இதினிமித்தம் நீங்கள் அவருடைய அழைப்பின் நம்பிக்கையையும், பரிசுத்தவான்களுக்குள் அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின் சுதந்திரம் என்னவென்பதையும் அறிந்துகொள்வீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, இது ரொம்ப முக்கியமானது என்று நினைக்கிறேன், ஏன்னா கிறிஸ்தவர்களாக இருக்கிற ஜனங்கள், உண்மையாய் கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் ஏற்றுகொண்டிருக்கின்றனர், அவரை அவர்கள் நம்புகிறார்கள், எனவே நாம் பேசுகிற காரியம் அவர்களுக்கு முற்றிலும் புதுமையாக இருந்திடும். மேலும் இங்கு பவுல் சொல்கிறார், ஹே, இது ஒரு இரகசியம் அதை நாம் வெளிப்படுத்த விரும்புகிறேன், தேவன் உங்களை உணர்வுள்ளவர்களாக்கி அவர் உங்களுக்காக வைத்திருப்பதை நீங்கள் அறிந்தும்படி உங்கள் மனக்கண்களை திறந்தருளுமாறு வேண்டிகொள்கிறேன். அப்படியிருந்தால் நீங்கள் மறுபடியும் சொல்லுவீர்கள். இதை தான் தேவன் எனக்கு தெரிவிக்க விரும்புகிறார்,

தேவன் தான் இதை நம்மிடம் கொண்டு வந்திருக்கிறார். அப்போது நீங்கள் அதை புரிந்துகொள்வீர்கள். அந்த வெளிச்சம் உதிக்கப்பாவ்கிறது இது எப்படி வேலை செய்யும் என்பதை அந்த ஒளி உங்களுக்கு வெளிப்படுத்திடும்,

**பார்பர்:** ஆமா, ஏற்கனவே இந்த காரியங்கள் அனைத்தும் உங்களிடம் இருக்கிறது. தேவனை இன்னும் அதிகமாய் பெற்றுகொள்ளும் விஷயம் அல்ல. எல்லாவற்றிலும் நாம் அவருக்கு சரி  என்று சொல்ல கற்றுகொள்ளும்  விஷயமாக இருக்கிறது. அப்பொழுது அவர் நமக்குள் வைத்திருக்கும் காரியங்களை நாம் புரிந்துகொள்ள அறிந்துகொள்ள துவங்கிடுவோம். அவர் துவங்கிவிட்டார், அந்த ஐசுவரியத்தை பற்றி நாம் பார்க்கலாம், வசனம் ஒன்றிலிருந்து துவங்குகிறார், அதில் ஒரு சில காரியங்களை தெளிவாக பார்க்க போகிறோம்.

அவர் சொல்கிறார், “தேவனுடைய, சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது.” இது, ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது. அநேக மார்கங்களில் இவரை பரிசுத்தவான் என்று கூறுகிறார்கள், அந்த நபர் ஒரு பரிசுத்தவான், ஆனா எல்லாரும் பரிசுத்தவானல்ல. ஆனால் வசனத்தில் நாம் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறோம். பரிசுத்தவான் என்றால் தேவனுக்காக அவரால் பயன்படுத்தப்படும்படி வேறுபிரிக்கப்பட்டவர்கள். அவருடைய பயன்பாட்டிற்காக. இந்த பூமில்

நாம் இருப்பதற்கான காரணங்களில் ஒன்று நம் இதயம் துடிப்பதற்கு காரணங்களில் ஒன்று நமக்காக அவர் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். அவர் நமக்குள் வாசம் பன்னும்படியாக வந்திருக்கிறார். நாம் எப்படிபட்டவர்கள் இல்லை என்று அவருக்கு தெரியும், அதோடு அவர் யார் என்பதும் நாம் அவருக்குள் யார் என்றும் அவருக்கு தெரியும், அதனால்தான் அவர் நமக்குள் வந்து வாசம் பண்ணுகிறார். அவர் தமது வேலைக்காக நம்மை வேறு பிரித்து வைத்திருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதை இப்போது அப்படியே நிறுத்திடலாம், ஏன்னா சிலர் சில கேள்விகளை கேட்க்கிறார்கள், “வேயின், கொஞ்ச நாளுக்கு முன்னாலதா நா தேவனை ஏற்றுகொண்டேன், இருந்தாலும் இச்சையான விருப்பங்களுக்கு என்னை விட்டுகொடுக்கிறேன். இன்னும் பலவிஷயங்களை விரும்புகிறேன். என்னுடைய வாழ்வில் பல பாவங்கள் இருக்கிறது. எனக்கு, நிச்சயமா, இயேசுவினுடைய தாக்கம் தேவைபடுது ஏன்னா எனக்குள்ள இருந்து அந்த நதி ஓடுவதை என்னால் உணர முடியல. சரி. பவுல் இங்கு தேவன் என்ன செய்ய சித்தமாக இருக்கிறார் என்று விவரித்து சொல்லுகிறார் என்பதை சொல்லுங்கள் ஜனங்களுடைய கேள்வி, “உங்களுக்கு தெரியுமா, எங்கிட்ட நிறைய பாவங்கள் இருக்குது. தன்னிடம் நிறைய பாவங்கள் இருக்கிற நபரிடம் இது சரிபட்டு வருமா? “

**பார்பர்:** நிச்சயமாக. நம்ம எல்லாருக்கும் இருக்கிறது, அதை மறுக்கமுடியாது. ஒருவர் என்னிடம் என்னுடைய வாழ்வில் நிறைய பாவங்கள் இருக்கிறது என்கிறார், அதற்கு நான், ஒவ்வொருன்றாக வரிசை படுத்திடுங்கள் என்பேன். நாம எல்லாரும், ஒவ்வொருநாளும் சொல்லலாம், நாம உண்மையாயிருக்கோம், நிறைய ஜனகள் உண்மையாக இருப்பது கிடையாது. ஆனா தேவன் நம்மை பரிமாற்றம் செய்ய விரும்புகிறார். தேவன் என்ன விரும்புகிறார் என்றால் நாம் புரிந்துகொள்ள உதவுகிறார், முதலாவதாக, அவருடைய வார்த்தையின் மூலம், அவர் நமக்கு கொடுத்ஹ்டிருப்பது அதிலிருந்து அவருக்கு சரி என்று சொல்ல நாம் கற்றுக்கொள்ள முடியும், நம்மிடம் இல்லாததை அவரிடம் கொடுத்து மாற்றிகொள்ளலாம் - அது ஆச்சரியமானது - அவருடையது நம்முடையதாகிடும்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்ளலாம், நாம் திரும்பி  வந்ததும், வேயின் என்ன பேச போகிறார் என்றால், தேவன் நமக்கு தேவையான ஆவிக்குரிய ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் கொடுத்திருக்கிறார். இது ஏன் மிகவும் அருமையானது என்பதை பற்றி அவர் பேச இருக்கிறார், தொடர்ந்து இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டிருப்பது Dr. வேயின் பார்பர், கிறிஸ்தவர்களாக நமது மாம்சத்தோடு போராடிக்கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் மூலம் தேவன் கொடுத்துள்ள காரியங்களை பற்றி பேச இருக்கிறார். நம்மில் பெரும்பானவர்கள் பல முறை, பல முறை நம்முடைய விருப்பங்களுக்கு நம்மை விட்டு கொடுத்திருக்கிறோம். தேவன் நமக்கு கொடுத்திருக்கும் பல வாக்குத்தத்தங்கள் நமக்கு புரியாமலே இருந்திருக்கிறது. வேயின் எபேசியரில் பவுல் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை உங்களுக்கு விளக்கி சொல்ல முயலுகிறார். ஒன்றாம் அதிகாரத்தில், வசனம் 3, தேவனுடைய முதல் தேசிய வங்கி என்று அழைக்கபடும் ஒன்றை இந்த வசனத்தில் காட்டுகிறார். அது என்ன?

**பார்பர்:** சரி, அதாவது ஜீவனுக்கும் தெய்வ பக்திக்கும் தேவையான அனைத்தையும் உடையவர்களாக மாறிடுவோம். பேதுரு சொல்வது போல 2 பேதுரு 1:3, கிறிஸ்துவுக்குள் சகலமும் நமக்கு இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் சகலமும் இருக்கிறது. எபேசியரில் சொல்லப்பட்டிருப்பதற்கு இது ஒரு திறவுகோல் வசனம், “அவருக்குள், அவருக்குள், கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுக்குள்.” எனவே கிரிஷ்டுவுக்குள் நமக்கு தேவையான அனைத்தும் இருக்கிறது. இருக்கிறவராகவே இருக்கிறவர். ஒரு பெண்ண என்னிடம் ஒருமுறை

கேட்டாங்க, இருக்கிறவராக இருப்பதென்றால் என்ன? நா சொன்னே, விடுபட்ட இடத்தை நிரப்புவது. நீங்க எப்படி இல்லையோ, அவர் அப்படி இருக்கிறார். அவர் நம்மிடம் எதிர்பார்க்கிற விஷயம் இதுதான், ஜான், நமக்கு சத்துவம் அளிப்பதற்கு அவர் நமக்குள் இருக்கிறார். அதுதான் கிறிஸ்தவ வாழ்வின் அழகு. இதுதான் நற்செய்தி.

**ஆன்கர்பெர்க்:** அதை பற்றி கொஞ்சம் விளக்கி சொல்லுங்க, ஏன்னா அது அப்படியே தலைக்கு மேல போறாமாதிரி இருக்குது. அவங்களுக்கு அது புரியல, ஆமா, கிறிஸ்துவால் எல்லாம் முடியும், ஆனா இது நா, வேயின்.

**பார்பர்:** சரியா சொன்னீங்க.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்து எப்படி நமக்குள் இருக்கிறார் என்பதை பற்றி சொல்லுங்க இந்த காரியம் நம்முடைய வாழ்வில் இருந்து எப்படி வெளிபடுகிறது,.

**பார்பர்:** இப்ப நாம மறுபடியும் பப்பாவை வைத்து பார்க்கலாம் என நினைக்கிறேன். சரி, இதுதான் என்னுடைய பப்பா. இதை விளக்கிட எனக்கு உதவியாயிருகிறார். அவருக்குள் எந்த ஜீவனும் இல்லை, மரித்தவரை போலிருக்கிறார். நியாயப்பிரமாணமானது அவரால் இயலாத காரியங்களை தரும்படியாக கேட்க்கிறது. இது சிலுவைக்கும் முன்பு நடக்கிறது; ஆனால் சிலுவைக்கு பிறகும் அப்படியே இருப்பதை உணருகிறார். தேவன் எதிர்பார்ப்பதை  இன்னும் தனது சுயமாக

எதையும் செய்ய முடியாமல் இருக்கிறார். எப்படியிருந்தாலும், தனக்குள் ஜீவன் வந்தது என்பதை அவர் உணரும்போது, எல்லாம் முடியும் அதுதான் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை பாதையாக இருக்கிறது. தேவன் நமக்குள் வாச,பன்னும்படியாக வந்திருக்கிறார். உங்களுக்கு தெயர்யுமா பவுல், அவர் எபேசியர் முதலாம் அதிகாரத்தில் என்ன சிகிறார், துதிக்க ஆரம்பிக்கிறார். " பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஸ்தோத்தரித்தல் என்றால் சிறப்பாக புகழ்ந்து பேசுதல் என்பதாகும். துதி என்பதற்கான வார்த்தை அது. பிதாவாகிய தேவனுக்கு துதி உண்டாகட்டும்." மேலும், எல்லாருக்கும் சொல்லுகிறேன், இவர் அப்போஸ்தலனாகிய பவுல்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இதுல என்ன விஷயம்ன்னா, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவை வரவேற்றிருக்கிறார்கள், அவர் தங்கள் பாவங்களில் இருந்து தங்களை விடுவிப்பார் என்று நம்புகின்றனர், அதில் அவர்களால் எதையும் செய்ய முடியாது என்று தெரிந்திருக்கிறார்கள். அதில் எந்த கிரியையும் இல்லை. நம்மால் செய்ய முடியும் விஷயம் எதுவுமில்லை. அவர்தான் எல்லாத்தையும் செய்யணும், சரியா. அவர் எல்லாவற்றையும் செய்வார் என்று அவர்கள் அவரை நம்புகின்றனர். இப்ப, நான் இரட்சிக்கப்பட்ட பிறகு, திடீரென்றுநாம் தேவனுக்காக வாழ வேண்டும் என்கிற எண்ணம் நமக்கு உண்டாகிறது.

**பார்பர்:** சரியா சொன்னீங்க.

**ஆன்கர்பெர்க்:** ஆனா இயேசு எதற்காக நமக்குள் வந்தார்? அதை பற்றி தான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம்.

**பார்பர்:** நிச்சயமாக, தேவன் நம்மிடம்  இருந்து எதிர்பார்க்கிற னைத்தையும் நாம் செய்ய நமக்கு சத்துவமளிக்கும்படியாக அவர் வந்தார். நீங்க சொன்னது முற்றிலும் உண்மைதான். அவர் எபேசியர் ஒன்றில் என்ன சொல்கிறார் என யோசித்து பாருங்கள். அவர் சொல்கிறார், முதலாவதாக, நாம் பரிசுத்தவான்கள். அதை பற்றி நாம் பார்த்தோம். நான் இந்தோனேஷியாவில் இருந்தேன், நா செமினறி பட்டபடிப்பை படித்து வந்தேன்.  இந்த விசேஷமான நபர்கள் உள்ள வருவாங்க, அதாவது, மற்ற தேசங்களில் அமெரிக்கர்களை டாலர் அடையாளம் போட்டவர்களாக பார்ப்பார்கள். அவங்களுக்கு நாங்க உதவுவோமா என்றிருப்பார்கள், அவர்களுக்கு முன்பாக தேவன் வைத்திருப்பதை பெற்றுக்கொள்ள முயலுவார்கள்.

அங்க தான் நான் சொல்ல ஆரம்பித்தேன், “ஆமா, காலையில் எழுப்பும்போது  நான் சொல்லுவேன், குட் மார்னிங், பரிசுத்தவானே, உங்க பெயர் என்னவாக இருந்தாலும் சரி, கண்ணாடியை பார்த்து பேசுங்கள். “ அவங்களால, அதை புரிந்துகொள்ள முடியல. முதல் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமாதிரி இருந்தது, இவன் என்ன பேசுகிறான்? நான்காவது நாள் நான் நடந்து போனதும், அவங்களுக்கு

பிரசங்கிக்கும்படி எழுந்து நின்றேன், போதிக்கும்படி நின்றபோது எல்லாரும் ஓர்முகமாக எழுந்து நின்று, 200க்கும் மேற்பட்டவர்கள், எல்லாரும் ஒன்றாக சொன்னாங்க, “குட் மார்னிங், பரிசுத்தவானாகிய வேயின்.” செமினரியின் தலைமை போருப்பிகுள் இருந்த நபர் என்னிடம் சொன்னார், அவர் சொன்னார், “ய்வேயின், எபேசியர்கள் இந்த ஜனங்கள் தங்கள் வாழ்வில் தேவன் எதிர்பார்க்கிற அனைத்தையும் தங்களிடம் கொண்டிருப்பதை உணர்ந்து புரிந்துகொள்ளும்படி உதவியிருக்கின்றனர் என்றார். இவர்கள் பரிசுத்தவான்கள். அவருடைய நோக்கத்திற்காக இவர்கள் வாழ்வில் அவருடைய திட்டத்தை நிறைவேற்ற அவரால் வேறுபிரிக்கப்பட்டவர்கள்.

மேலும் அவர் மூன்றாம் வசனத்தில் சொல்லுகிறார், “நமுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர், இந்த வார்த்தைகளை கவனியுங்கள், “சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திற்குக்கிறார் - அதாவது என்னவென்றால், சகல என்ற வார்த்தை கிரேக்கத்தில் சிறந்த வார்த்தையாகும். அதற்கு அர்த்தம் “சகல - கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.” எல்லாரும் என்னிடம் கேட்ப்பார்கள், “இரண்டாவது ஆசீர்வாதம் இருக்கிறது? கேளுங்க, எங்கிட்ட 10,472,000 இருக்குது. கிறிஸ்துவுக்குள் எல்லாம் எனக்கு இருக்கிறது. இதுல

பிரச்சனை என்னவென்றால், என்னிடம் ஏற்க்கனவே இருப்பதை எப்படி பெற்றுகொள்வதென்று எனக்கு தெரியவில்லை. அப்படியே நான் அதை பெற்றுகொண்டேன், நாம் தொடர்ந்து சொல்லிகொண்டே இருக்கிறோம், விசுவாசத்தினால், என்று அதன் அர்த்தம் என்ன? எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரையே நாம் நம்புகிறேன். இப்படி அதை சொல்ல முடியும். விசுவாசத்தினால் நான்  சரி என்று சொல்ல போகிறேன். கிறிஸ்துவுக்கு சரி எண்டு சொல்வதையும் விசுவாசத்தையும் பிரிக்க முடியாது. விசுவாசம் என்பது அதுதான். அது மாறாதது. அந்த விதமாக் அவாள நாம் கற்றுக்கொள்ளவேண்டும், கிறிஸ்துவுக்குள் நம்முடையதை நாம் உரிமை பாராட்ட துவ்னகிடவேண்டும். அதாவது வங்கியின் அட்டை நமுடைய பெயரில் பொறிக்கப்பட்டு கொடுப்பது போன்றதாகும், ஆனா அதை எபப்டி பெற்றுகொள்ள ஒரே வலி அவருக்கு முன்பாக பணிந்து அவருக்கு சரி என்று சொல்வதுதான்.

**ஆன்கர்பெர்க்:** நாம் எப்போது நம்மை அர்ப்பணிக்கிறோம், என்ன நடக்கிறது?

**பார்பர்:** சரி, நாம் நமை அர்ப்பணிக்கும்போது நமக்குள் இருக்கிற ஜீவனை தட்டி ய்முப்பி செயல்பட வைக்கிறோம். இதற்கு இணையான சில வசனங்களை நாம் பார்த்தோம். கலாத்தியர் 2: 20 சொல்லப்பட்டிருப்பது போல, "நான் கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன், அதினால் இனி, நானல்ல, கிறிஸ்துவே,

எனக்குள் ஜீஎவிக்கிறார். பிலிப்பியர் 1:21, அவர் சொல்கிறார், கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்." கொலோசெயர் 3: 4, கிறிஸ்துவே நமது, ஜீவனாக இருக்கிறார்." அதனால இங்கிருந்துதான், அந்த நதி புறப்பட ஆயத்தமாக இருக்கிறார், ஆனால் அவருக்கு நம்மை அர்ப்பணிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். க் கீழ்படிதல் என்று சொல்லாமல் அர்ப்பணித்தல் என்று சொல்ல காரணம், பரிசேயர்கள் கீழ்படிதலோடு இருந்தார்கள். கீழ்ப்படிதல், ஆமா, அஹது முக்கியம்தான், ஆனால் அதை செயல்முறையாக இல்லாமல் ஒரு விளைவாக காட்சியளிக்கிறது. எல்லா பாவமும் முதலில் இருதயத்தில் தான் தோன்றுகிறது. அது இருதயத்தின் பிரச்சனை. நான் வரும்போது என் இருதயமும் அவருக்கு தன்னை விட்டுகொடுத்து அர்ப்பணிப்பதாக இருக்கிறது, இங்குதான் அந்த ஆணை தகர்க்கப்பட்டு நதி புரண்டோடும்படியான வழிகள் திறக்கபடுகிற நிலை உண்டாகிறது.

**ஆன்கர்பெர்க்:** ஜனங்கள் கேட்க்கிறார்கள், சரி, வேயின், இது ஏ எனக்கு ரொம்ப கஷ்டமானதாக இருக்கு?

**பார்பர்:** ஏன்னா இப்படி செய்வது நம்ம எல்லாருக்கும் கடினம் தான். உண்மையில், இப்படி ஜீவிப்பது இயலாத காரியம்தான், ஆனா சரி என்று சொல்வது, கற்றுகொள்ளும்போது நமக்க்கு எளிமையாக இருக்கும். அதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அது பிரதிபலிப்பை போன்றது. இறுதியில் நீங்கள் கற்றுகொள்வீர்கள். கேளுங்கள்,

மாம்சத்திற்கு மாட்டேன் என்று சொல்ல சிறந்த வழி கிறிஸ்துவுக்கு சரி என்று சொல்வதுதான். மாம்சத்தை பார்ப்பதை விட்டுவிடுங்கள், நமால் முடியாததை பார்ப்பதை விட்டுவிடுங்கள், அவரை நோக்கி பார்க்க பலகிடுங்கள் அவரால் முடியும் என்பதை பாருங்கள்.

**ஆன்கர்பெர்க்:** சரி, உங்களுடைய சில புத்தகங்களில் நீங்கள் சொல்லியிருக்கும் கருத்து எனக்கு பிடிக்கும், நீங்க அப்படி ஜெபிக்க ஆரம்பிச்சுட்டீங்க, அதாவது, “தேவனே, நீங்க இதைதான் சொல்றீங்கன்னு எனக்கு புரியுது. என்னை மாற்ற துவங்கிடும், ஏன்னா எனக்கு எந்தவிதமான உணர்வும் இல்லை. நா அப்படி செய்ய விரும்பவில்லை, ஆனா நா இதை செய்யணுன்னு நீங்க விரும்புறீங்கன்னு எனக்கு தெஇர்யும், என் பாவத்தை அறிக்கை செய்கிறேன், எனகென்று எந்தவிதமான விருப்பமும் இல்லை என்கிறேன். தேவனே, நீர் தான் என்னில் விருப்பத்தை உண்டாக்க வேண்டும், இந்த பகுதியில் கூட நான் உமக்கு கீழ்படிந்து இருக்க வேண்டும் என விரும்புகிறேன். தேவன உங்களுக்கு சில காரியங்களை வெளிப்படுத்திய அனுபவம் உங்க சொந்த வாழ்க்கையில் அநேகம் இருக்கிறதென்று தெரியும். நீங்க சிலவற்றை செய்ய விரும்பல, இறுதியாக அவரே உங்களை அந்த நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தினார். ஒரு பெண் மற்றும் அருட்பநியாலரை பற்றி நான் யோசித்து கொண்டிருந்தேன், உங்க சபையின் ஒரு பகுதி, அங்குள்ள அருட்பணிக்காக நன்கொடைகளை சேகரிப்பது,

**பார்பர்:** சரியா சொன்னீங்கள்.

**ஆன்கர்பெர்க்:** அந்த சம்பவத்தை பற்றி சொல்லுங்க.

**பார்பர்:** உண்மை இதுதான், அப்பதா அந்த சபைக்கு போனேன் பாஸ்டராக போனேன், அவங்க என்னிடமாக வந்தார்கள், நா மூன்று வாரங்கள் அங்கு இல்லை. அவங்க சொன்னாங்க, "வாலிபனே, இப்ப, அவங்க உங்களுக்கு முன்னால விரலை நீட்டும்போது, அது முழுவதுமாக இருக்கும். அவங்க சொன்னாங்க, வாலிபனே, நீங்க ஒரு விஷயத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்." நான் கேட்டேன், "என்னது அது? அதற்கு அவங்க, "நா நம்முடைய அருட்பணி அமைப்பின் தலைவராக இருக்கிறேன்." உண்மையில், அதை WMC என்று அழைப்போம், விமன்ஸ் மிஷனரி யூனியன். அவன் எங்கிட்ட சொன்னாங்க, நான் தான் பிரசிடென்ட், நா உன்கிட்ட் ஒன்னு சொல்ல விஸ்ரும்புகிறேன். நீங்க புதுசுன்னு எனக்கு தெரியும் நீங்க இங்க வந்திருப்பதும் எனக்கு தெரியும். எங்களோட இஷ்டப்படி இதுவரை நாங்க செய்த மாதிரிதான் இனிமேலும் செய்ய இருக்கிறோம். நா சொன்னது புரிந்ததா என்றார்கள்." நா அவங்ககிட்ட சொன்னேன், சரி மேடம், சரி மேடம். இந்த WMC என்பது விமன்ஸ் மிலிடரி யூனியன் இல்லை என்பதை புரிந்துகொள்ள எனக்கு கொஞ்சம் நேரம் எடுத்தது. அதாவது,   பெண்களுக்கு என்று பிரத்த்யேகமாக ஒரு பள்ளி இருக்கிறது அங்க அவங்களை பயிற்றுவித்து நான் எங்க பாஸ்டரா

போவேனோ அங்க அனுப்புவாங்க. அபூர்வமா இருந்துச்சு. என்னையே அவங்க பின்பற்றி வந்துட்டு இருந்தாங்க.

ஒரு வருடத்தின் எல்லா நிகழ்வுகளிலும் என்னை பிடித்துகொள்வார்கள். கிறிஸ்மஸ் காலங்களில் லோட்டிஈ மூன். வசந்த காலத்தில் ஆன்னி ஆர்ம்ஸ்ட்ராங். அவங்க எங்கிட்ட வந்து என்ன சொல்வாங்கன்னா, "ப்ரீச்சர், ப்ரீச்சர், என்று என்னை அழைத்து, "ப்ரீச்சர், நீங்க மேடையில் ஏறி இந்த ஜனங்களை சரமாரியாக பேச வேண்டும், ஏன்னா நீங் அபேசளைன்னா நமக்கு காணிக்கை கிடைக்காது என்பார்கள்." அதை நான் மறந்திடுவேன். ஞாயிறு காலை என்னுடைய பெயர் இருப்பதை நான்மரந்துவிட்டேன் ஏன்னா என்னுடைய செய்தியின் மீதுதான் என்னுடைய முழு கவனமும் இருந்தது. இப்ப, இறுதியா ஒரு வருஷம் அவங்க எங்கிட்ட வந்து என்னிடம் பேசும்போது, அவங்க சொன்னாங்கள், "ஆனி ஆர்ம்ஸ்ட்ராங் காணிக்கை வசந்த காலத்தில் வரும் என்பதை மறந்துவிடாதீர்கள் என்றார்.

**ஆன்கர்பெர்க்:** அவர் அருட்பணி காணிக்கை தான

**பார்பர்:** நிச்சயமா. அருட்பணி காணிக்கை, இந்த பலதரப்பட்ட அருட்பநியாலர்களின் பெயர்களில் வந்திடும்.ள் எனக்கு பிடிக்காத இப்படிப்பட்டவர்கள் இருக்கும் இடத்திற்கு வரவேண்டியிருந்தது, ஆனா அவங்க பரலோகத்தில் இருந்ததினால் என்னை தொந்தரவு செய்ய

விரும்பவில்லை. நான் அன்று ப்மேடையில் ஏறி பிரசங்கிக்க துவங்கினேன் பிலிப்பியர் 2, “கிறிஷ்டுவுக்குள் இருந்த அதே மனப்பான்மை உங்களுக்குள்ளும் இருக்க கடவது.” நா பேசி முடித்ததும், இதை அறிவிக்க மறந்துவிட்டேன். பிரசங்கத்திற்கு பிறகு, அதாவது இந்த மாதிரியான செய்திகள் இருக்கும்.

அவங்க வருவதை பார்த்ததும் என்ன மறந்தேன் என்று நினைவிற்கு வந்தது. இது ஆராதனை முடிந்த பிறகு நடந்தது. அவங்க என்னிடம் வந்து என்னை பார்த்து சொன்னாங்க, “ப்ரீச்சர்,” அதற்கு என்ன ஆச்சு என்றேன்/ அதாவது, நாங்க நன்றாகத்தான் இருந்தோம்; இங்க ஒரு நதியோடு நாங்கள பாய்ந்துகொண்டிருந்தோம். நா கேட்டேன், “என்னாச்சு? அதற்கு அவங்க, “நீங்க காணிக்கையை பற்றி எதுவுமே சொல்லலையே.” நான் கேட்டேன், “சரி, இந்த வருடம் உங்கள் இலக்கு என்ன? அதற்கு அவங்க, 1350 டாலர் என்றார்கள், அத்தகு நான், சரி, கடந்த ஆண்டு உங்க இலக்கு என்ன என்றேன், அதற்கு அவங்க, 1300 டாலர்கள் என்றார். அவங்ககிட்ட ஒரு நல்ல விஷயத்தை சொல்லும்படி நான் விரும்பினேன். ஆனா மாம்சத்திற்கு பின்னால் நடக்கும்போது, நீங்க விரும்புகிற மாதிரி அது அமைந்திடாது. நான் கேட்டேன், “இன்னும் 50 டாலர்கள் அதிகமாக தேவனால் தார் முடியுன்னு நினைக்கிறீங்களா? அவங்க சொன்னாங்க ம்ம். என்று சொல்லி போயிட்டாங்க, நாமும் .. என்றபடி போயிட்டேன். நா

மற்றொரு பக்கமாக கடந்துபோநேன். அந்த சூழ்நிலை அருமையாக் ஐல்லை. அது நல்ல சூழ்நிலையாக காணப்படவில்லை.

நா வீட்டுக்கு போயிட்டு இருக்கும்போது, என்னுடைய செய்தியை தேவன் மறுபடியும் என் நினைவிற்கு கொண்டு வந்தார். "கிரிஷ்டுவுக்குள் இருந்த அதே மனப்பான்மை உங்களுக்குள்ளும் இருக்க கடவது." இப்போது மாம்சம் வெளிப்பட்டது என்பதை நான் புரிந்துகொண்டேன். மேலுன் நான் சொன்னேன், தேவனே, இதை நான் உம்மிடம் அறிக்கை இடுகிறேன். தேவன் என்னிடம் பேசுவதுபோல் இருந்தது, "இந்த ஸ்திரீயை உனக்கு பிடிக்குமா? நா யோசிக்க ஆரம்பித்தேன். அவங்கள எனக்கு சுத்தமா பிடிக்காது. அவர் சொன்னார், உன் மூலமாக நான் இந்த ஸ்திரீயை நேசிக்க நீ அனுமதிக்க விரும்புகிறாயா என்றார். நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன், நா இப்படி பேச ஆரம்பித்தபோது, "தேவனே, இவங்கள என்னால நேசிக்க முடியாது. இவங்கள எனக்கு சுத்தமா பிடிக்காது. ஆனா, பிதாவர், நீர் என்னை அவர்களை நேசிக்கும்படி சொல்லியிருக்கிறீர், உம்மிடம் ஒன்றை கேட்கிறேன், என்னிடம் நீர் எதிர்பார்க்கிற அன்பை உருவாக்க முடியுமா, அவரை நேசிக்கும்படியான அன்பு? அடுத்த 16-17 ஆண்டுகளுக்கு அவர்கள் தான் சிறந்த நெருங்கிய நண்பராக இருக்கிறார்கள். அவருடைய கணவர், இவர்கள் இருவரும் எங்களுக்கு, ரொம்ப, பிரியமான நண்பர்கள்.

இது ஒரு நடைமுறை உதாரணமாக நான் பார்க்கிறேன், தேவன் எதிர்பார்க்கிற விதத்தில் மற்றவர்களை நம்மால் நேசிக்க முடியாது, ஆனால் நம்மால் முடியாததை நாம் செய்யும்படியாக தேவன் நம்மக்குள்ளாக இருந்து செய்கிறார். அது நமக்குள் இருக்கிற ஜீவன் வாழ்க்கை.

நேயர்களே, இப்பதா எபேசியரை ஆரம்பித்து இருக்கிறோம். அடுத்த வாரம் எபேசியரில் உள்ள தலைப்பை பற்றி பார்க்க இருக்கிறோம் உங்கள் இருதயத்தை இயேசு தமது இல்லமாக நினைக்குவிதமாக நடந்து கொள்வது எப்படி, சரி. நீங்கள் நிச்சயமாக ஆனந்தப்படுவீர்கள் மேலும் தேவனுடைய வார்த்தையில் இருந்து மேலான காரியங்களையும் நீங்கள் அறிந்துகொள்ள முடியும். நீங்கள் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.